## கிராமங்களில் இருந்து நிறைய

# விளையாட்டு வீரர்கள் வரவேண்டும் என்பதற்காகவே ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டம்!

## திருவள்ளூர் மாவட்டம் சோழவரத்தில் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஊக்கமளிக்கும் உரை!

சென்னை, மார்ச் 2–

**சென்னை, சோழவரம் தெற்கு ஒன்றியம் பாடியநல்லூர் நகராட்சியில் நடைபெற்ற விழாவில் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு விளையாட்டு உபகரணங்களை வழங்கிப் பேசினார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

கலைஞரின் நூற்றாண்டில், இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால் நம் தலைவரின் பிறந்தநாளில் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த 526 ஊராட்சி மன்றங்களுக்கு ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள 12 ஆயிரத்து 600 கிராமப் பஞ்சாயத்துகளுக்கு 86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்களைக் கொண்டுசேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டத்தை, மதுரையில் சென்ற வாரம் தொடங்கி வைத்தோம். நேற்று கோவை மாவட்டத்தில் உள்ள 228 ஊராட்சிகளுக்கும் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனை களுக்கும் கொடுத்தோம்.




திருவள்ளூரில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (01.03.2024) மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் கொண்டு செல்லும் வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர்.அதுல்ய மிஸ்ரா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், ச.மு.நாசர், வி.ஜி.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். டி.பிரபுசங்கர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஸ்போர்ட்ஸ் கிட்டை அதிகம் பெற்ற மாவட்டம்!

இன்று திருவள்ளூர் மாவட்டத்தில் 526 ஊராட்சிகளுக்கு கிரிக்கெட், வாலிபால், கபடி, கால்பந்து, சிலம்பம் உள்ளிட்ட 33 வகையான விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 672 கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை உங்களின் கையில் ஒப்படைக்க இருக்கிறோம். இதுவரை கொடுத்த மாவட்டங்களிலேயே நம் திருவள்ளூர் மாவட்டத்தில்தான் பஞ்சாயத்துகளுக்கு அதிக அளவிலான ஸ்போர்ட்ஸ் கிட்டை நாம் கொடுத்திருக்கிறோம். அந்தப் பெருமை இன்றைக்கு இந்த திருவள்ளூர் மாவட்டத்துக்குச் சேரும்.

இந்த திருவள்ளூர் மாவட்டம் ஏராளமான விளையாட்டு வீரர்களை தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் வாரி வழங்கியிருக்கிறது. இங்கேகூட நிறைய சாதனையாளர்கள் வந்திருக்கிறார்கள். மேடையில் உட்கார வைத்திருக்கிறோம். திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீகார்த்திக் சபரிராஜ் எகிப்தில் நடந்த ‘ஐ.எஸ்.எஸ்.எஃப் வேர்ல்டு சாம்பியன்ஷிப்’ துப்பாக்கிச் சுடுதல் போட்டி ஜூனியர் பிரிவில் ஒரு தங்கப்பதக்கமும், ஒரு வெள்ளிப் பதக்கமும் பெற்று சாதனை படைத்திருக்கிறார். அவருக்கு நம் அத்தனைப்பேரும் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வோம்.

அதேபோல் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த பளுதூக்கும் வீரர் தனுஷ் இங்கே வருகை தந்திருக்கிறார். ‘ஐ.டபிள்யூ.எஃப். வேர்ல்டு சாம்பியன்ஷிப்’ போட்டியில் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும், ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்றிருக்கிறார். கடந்த ஆண்டு நடந்த காமன்வெல்த் போட்டியிலும் தமிழ்நாடு அளவில் நடந்த போட்டியிலும் தங்கப்பதக்கம் வாங்கி இந்த திருவள்ளூர் மாவட்டத்திற்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்குமே பெருமையைத் தேடித் தந்திருக்கிறார்.

இன்றைக்கு கார்த்திக் சபரிராஜ் அவர்களையும், தனுஷ் அவர்களையும் மேடையில் ஏற்றி உங்களுக்கு அறிமுகப்படுத்தி இருக்கிறோம் என்றால் உங்கள் ஒவ்வொரு விளையாட்டு வீரர்களுக்கும் அவர்கள்தான் ‘இன்ஸ்பிரேஷன்’ ஆக இருப்பார்கள்.

### கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டி!

சமீபத்தில் ‘கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டி’களை தமிழ்நாட்டில் நடத்திக் காட்டினோம். அந்தப் போட்டியில் 38 தங்கப் பதக்கங்கள், 21 வெள்ளிப் பதக்கங்கள், 39 வெண்கலப் பதக்கங்கள் என 98 பதக்கங்களுடன் தமிழ்நாடு முதன்முறையாகப் பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடம் வந்தது. அதில் ஒரு தங்கப்பதக்கம் நம் தம்பி தனுஷ் அவர்கள் பெற்றது என்பதைப் பெருமையோடு இங்கு சொல்ல விரும்புகிறேன். அடுத்த முறை நாம் இன்னும் நிறைய முயற்சி எடுத்தோம் என்றால், பயிற்சி எடுத்தால் அடுத்த முறை இரண்டாவது இடத்தில் இருந்து முதல் இடத்தைப் பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம் விளையாட்டு மேம்பாட்டுத்துறை எடுத்து வருகிற பல்வேறு முயற்சிகளைப் பாராட்டி ‘கான்ஃபிடரேஷன் ஆப் இந்தியன் இண்டஸ்ட்ரீஸ்’ என்ற அமைப்பு 15 நாட்களுக்கு முன்பு ‘பெஸ்ட் ஸ்டேட் ப்ரொமோட்டிங் ஸ்போர்ட்ஸ்’ என்ற விருதை நம் தமிழ்நாடு அரசுக்கு அளித்திருக்கிறது.

மிகப் பிரபலமான ‘தி ஹிந்து’ நாளிதழ் குழுமத்திலிருந்து வரும் ‘ஸ்போர்ட்ஸ் ஸ்டார்’ என்ற பத்திரிகை சார்பாக 10 நாட்களுக்கு முன்பு நம் விளையாட்டுத் துறைக்கு ‘தி பெஸ்ட் ஸ்டேட் ஃபார் தி ப்ரோமோஷன் ஆஃப் ஸ்போர்ட்ஸ்’ என்ற விருதையும் நம் அரசுக்கு வழங்கி இருக்கிறார்கள்.

கடந்த வருடம் ‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை’யைத் தொடங்கி அதன் மூலம் ஏராளமான ஏழை, எளிய மாற்றுத்திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்குத் தொடர்ந்து உதவிகளைச் செய்து வருகிறோம். இதுவரைக்கும் 300க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களுக்குச் சுமார் 6 கோடி அளவில் ‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை’யின் மூலம் நிதியுதவி வழங்கியிருக்கிறோம்.

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்களை வெல்கிற நம் வீரர் வீராங்கனைகளுக்குத் தொடர்ந்து உயரிய ஊக்கத்தொகை வழங்கி வருகிறோம். கடந்த வாரம் 650 வீரர்களுக்கு ரூபாய் 16 கோடியே 24 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகையாக வழங்கியிருக்கிறோம்.

தொடர்ந்து, தமிழ்நாட்டில் கேலோ இந்தியா யூத் கேம்ஸ், ஏசியன் ஹாக்கி கோப்பை தொடர், ஸ்குவாஷ் உலகக் கோப்பை, வேர்ல்டு சர்ஃபிங் லீக், சைக்கிளத்தான், சென்னை செஸ் மாஸ்டர்ஸ்2023, நேஷனல் ஹாக்கி தொடர் போன்ற போட்டிகளைத் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

### விளையாட்டுத் துறை என்றாலே அது தமிழ்நாடு தான்!

இந்தியாவில் விளையாட்டுத்துறை என்றால், அது தமிழ்நாடுதான் என்ற வகையில் தொடர்ந்து புதுப்புது முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். அதில் மிக மிக முக்கியமானதுதான் இந்த ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டம். விளையாட்டுத் துறை வளர்ச்சி என்பது நகரங்களில் மட்டும் இருக்கக்கூடாது. அது கிராமங்களுக்கும் சென்றடைய வேண்டும். கிராமங்களில் இருந்து நிறைய விளையாட்டு வீரர்கள் வரவேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டத்தை நாங்கள் தொடங்கி இருக்கிறோம். இந்த விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி, கிராமங்களில் இருக்கக்கூடிய இளைஞர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் புத்துணர்ச்சியுடன் இருக்க வேண்டும் என்று உங்களை யெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

### கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்!

முத்தமிழறிஞர் கலைஞரின் பெயரில் எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன. இருந்தாலும், விளையாட்டுத் துறையின் சார்பாக கலைஞரின் பெயரில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றால், அது இது தான் முதல் முறை. கலைஞர் அவர்களுக்கு அரசியல்வாதி, இலக்கியவாதி, பேச்சாளர், எழுத்தாளர் எனப் பல முகங்கள் உண்டு. ஆனால், விளையாட்டுக்கும் கலைஞருக்கும் என்ன தொடர்பு? ஏன் இந்தத் திட்டத்துக்கு ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ என்று பெயர் வைத்திருக்கிறார்கள் என்று உங்களில் சில பேருக்குச் சந்தேகம் இருக்கும். கலைஞர் அவர்கள் தன் சிறு வயதிலேயே களத்தில் இறங்கி விளையாடியவர். அதன் பிறகு அவர் அரசியலுக்கு வந்ததினால், ஆடுகளத்தில் விளையாடாமல் இருந்திருக்கலாம். கலைஞர் அவர்களின் பெயரை இந்த திட்டத்திற்கு வைத்த ஒரே காரணம் ஒரு விளையாட்டு வீரனுக்கு இருக்கக்கூடிய அத்தனைக் குணங்களும் திறமைகளும் கலைஞர் அவர்களுக்கு இருந்தது. அதுதான் அவரின் சிறப்பு.

ஆற்றல், கூர்மையான மனது, தோல்வியிலும் துவண்டு விடாத மனத்திடம், கூட்டுமுயற்சி என கலைஞரின் பண்புகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். இவையெல்லாம் விளையாட்டு வீரர்களுக்கும் அவசியமானது. கலைஞரின் ஆற்றலுக்கு நிகராக இன்னொருவரின் ஆற்றலை ஒப்பிட்டுப் பார்க்க முடியாது.

இன்றைக்கு இவ்வளவு சாலை வசதிகள், போக்குவரத்து வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள் இருக்கின்றன. இந்தக் காலத்திலேயே நாம் ஒவ்வொரு ஊருக்கும் சுற்றுப்பயணம் போகும் போது அயற்சி ஏற்படுகிறது. ஆனால், எந்தவித வசதிகளும் இல்லாமல் அந்தக் காலத்திலேயே தமிழ்நாடு முழுவதும் கிராமம், கிராமமாகச் சென்று சுற்றுப்பயணம் செய்து கட்சியை வளர்த்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அதற்கு எந்த அளவுக்கு அவருக்கு ஆற்றல் இருந்திருக்க வேண்டும்? எந்த அளவுக்கு அவர் உழைத்திருப்பார் என்று நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல கலைஞரிடம் இருந்த ‘ஷார்ப் மைண்ட்’ மிக மிக ஆச்சரியமானது. தான் என்ன செய்யப் போகிறோம், அதற்கு எதிர் தரப்பில் இருப்பவர்கள் என்ன செய்வார்கள், அதற்கு நாம் என்ன பதில் சொல்ல வேண்டும் என்று எப்போதுமே தயாராக இருந்தவர்தான் கலைஞர் அவர்கள். ஒவ்வொரு விளையாட்டு வீரனுக்கும் அந்தத் திறமை தேவை.

நாம் இப்படி விளையாண்டால், நம் எதிரணியினர் எப்படி விளையாடுவார்கள்? அதற்கு நாம் எப்படித் திருப்பி பதிலடி தரப் போகிறோம் என்று கூர்மையான அறிவு இருந்தால்தான் விளையாட்டில் நாம் வெற்றி பெற முடியும்.

வெற்றியாக இருந்தாலும் சரி, தோல்வியாக இருந்தாலும் சரி அவை இரண்டையுமே சமமாகப் பார்த்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். தோல்வி அடைந்து விட்டோம் என்று துவண்டு விடக்கூடாது. வெற்றி பெற்றுவிட்டோம் என்று ஆணவத்தில் ஆடவும் கூடாது. அந்த மனத் திடமும் விளையாட்டு வீரனுக்கு மிக மிக முக்கியம்.

### இந்தியாவில் கலைஞர் அரசியல் வீரராக உயர்ந்து நின்றார்!

அதேபோன்று கலைஞரின் ‘டீம் ஒர்க்’. ஒரு ‘டஃப் டீம்’ இருந்தால்தான் ஒரு கடுமையான போட்டியைக் கொடுக்க முடியும். அதை நீங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஒரு நல்ல அணியை அமைத்துக் கொண்டாலே பாதி வெற்றி அடைந்ததற்குச் சமம். இப்படியான குணங்களும் திறமைகளும் கலைஞர் அவர்களுக்கு இருந்ததால்தான், யாராலும் எப்போதும் வீழ்த்த முடியாத அரசியல் வீரராக கலைஞர் அவர்கள் இந்தியாவில் உயர்ந்து நின்றார்.

அத்தகைய கலைஞரின் பெயரால் வழங்கப்படுகிற இந்த விளையாட்டு உபகரணங்களைப் பெறக்கூடிய இளைஞர்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம் கலைஞர் அவர்களுக்கு இருந்த அந்தக் குணங்களையும் திறமைகளையும் நீங்களும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அந்தக் குணங்களை நீங்கள் வளர்த்துக் கொண்டு பல்வேறு சாதனைகளைப் படைக்க வேண்டும்.

வெற்றி என்பது சுலபமாகக் கிடைக்காது. ‘நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்’ என்று டாக்டர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். எனவே, விளையாட்டுத்துறை மட்டுமல்ல. நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள எந்தத் துறையாக இருந்தாலும் அதில் வெல்ல வேண்டும் என்றால் இன்றைய இளம் தலைமுறையினர் அதற்காக உழைக்க வேண்டும்.

இந்த கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டைப் பெற்ற திருவள்ளூர் மாவட்டத்தின் அத்தனை ஊராட்சிகளிலும் அந்த ஊராட்சிகளின் முகங்களாக உள்ள மாணவ, மாணவிகளையும், விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும், இந்த நேரத்தில் வாழ்த்தி நம் மாவட்ட பொறுப்பு அமைச்சர் ராணிப்பேட்டை காந்தி அவர்களுக்கு எனது நன்றியைக் கூறிக்கொண்டு, வந்திருக்கக்கூடிய அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் எனது வாழ்த்தைக் கூறிக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் ராணிப்பேட்டை காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் மாதவரம் சுதர்சனம், துரை.சந்திரசேகர், ஆவடி நாசர், கிருஷ்ணசாமி, வி.ஜி.ராஜேந்திரன், டி.ஜே.கோவிந்தராஜன், திருத்தணி சந்திரன், ஆவடி மேயர் உதயகுமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேக்நாத் ரெட்டி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் பிரபுசங்கர், மாவட்ட கூடுதல் ஆட்சியர் டாக்டர் சுகபத்ரா, ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் கே.வை.ஜி.உமா மகேஸ்வரி, சார் ஆட்சியர் வாகே சங்கேத் பல்வத்சிங், ஒன்றியக் குழுத் தலைவர் ராசாத்தி செல்வசேகரன், துணைத்தலைவர் கருணாகரன், உலகளாவிய பளுதூக்கும் போட்டியில் பல பதக்கங்களை வென்ற தனுஷ், ஆசிய துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற ஸ்ரீகார்த்திக் சபரிராஜ், சி.எச்.சேகர், எல்லாபுரம் மூர்த்தி, காயத்திரி ஸ்ரீதரன், துர்கா பிரசாத் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ.இரவிச்சந்திரன்

**மார்ச் 1 (2021)**



தளது இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.

முப்பது ஆண்டுகள் தொடர்ந்து திருப்பனந்தாள் ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

திருப்பனந்தாள் ஊராட்சி மன்றத் தலைவர், ஒன்றிய பெருந்தலைவர், நிலவள வங்கி தலைவர், சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டக சாலை தலைவர், திருவிடைமருதூர் வீட்டு வசதி வாரிய தலைவர், மாநில நிலவள வங்கி இயக்குநர், தஞ்சை வேளாண் விற்பனைக்குழு துணைத் தலைவர் என பல்வேறு பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

### சென்னை தெற்கில்

# திராவிட முதல்வரின் பிறந்தநாள் இன்றைய நிகழ்ச்சிகள்!

## மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை, மார்ச். 2-

**நாள்: 2–3–2024**

வாழ்த்தரங்கம் இடம்: சைதை தேரடித் திடல், தலைப்பு : ‘திராவிட மாடல் தேசத்தின் விடியல்’, உரையாற்றுவோர் : திருச்சி என்.சிவா, எம்.பி., வழக்கறிஞர் அ. அருள்மொழி, மதிமாறன், ஈரோடு சத்யவதி, நாகலட்சுமி. ஏற்பாடு:எம்.கிருஷ்ணமூர்த்தி, பகுதிச் செயலாளர். - நெறியாளுகை : கவிஞர் இளையகம்பன்.

139 அ வட்டம், சாரதி நகர், நிகழ்ச்சி : மருத்துவ முகாம், தலைமை : சை.மு. சேகர், வட்டச் செயலாளர்.

139வது வட்டம், எத்திராஜ் நகர், நிகழ்ச்சி : மருத்துவ முகாம், தலைமை : அட்கோ கமலநாதன், வட்டச் செயலாளர்.

140வது வட்டம், புஷ்பவதி அம்மன் கோயில் தெரு, நிகழ்ச்சி : மருத்துவ முகாம், தலைமை : வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், பொதுக்குழு உறுப்பினர்.

168வது வட்டம், பூந்தமல்லி சாலை, ஈக்காட்டுத் தாங்கல், நிகழ்ச்சி : மருத்துவ முகாம், தலைமை : நா.ராதாகிருஷ்ணன், வட்டச் செயலாளர்.

168 அ வட்டம், நெருப்புமேடு, சைதாப்பேட்டை, நிகழ்ச்சி : மருத்துவ முகாம், தலைமை : தா.பாண்டியன், வட்ட துணைச் செயலாளர்.

172வது வட்டம், மசூதி காலனி, மடுவின்கரை, நிகழ்ச்சி : மருத்துவ முகாம், தலைமை : க.உமாபதி, மாவட்ட பிரதிநிதி.

129வது வட்டம், மாமன்ற உறுப்பினர் அலுவலகம், நிகழ்ச்சி : துப்புறவுப் பணியாளர்கள் உள்ளிட்ட மாநகராட்சி ஊழியர்கள் 300 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல், தலைமை: எஸ்.விஜயகுமார்.

176 அ வட்டம், நிகழ்ச்சி : 1000 நபர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குதல், தலைமை : கே.என்.தாமோதரன், வட்டச் செயலாளர்.

177வது வட்டம், வேளச்சேரி நியூகாலனி, நிகழ்ச்சி : 500 நபர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குதல், தலைமை : பொ.த.மதிவாணன், வட்டச் செயலாளர்.

177வது வட்டம், வேளச்சேரி திரௌபதி அம்மன் தெரு, நிகழ்ச்சி : 1000 நபர்களுக்கு மதிய உணவு வழங்குதல், தலைமை : பொ.த.மதிவா ணன், வட்டச் செயலாளர்.

177 அ வட்டம், தண்டீஸ்வரம் முதன்மை சாலை, நிகழ்ச்சி : 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல், தலைமை :அருண்நடராசன், வ.இ.அ.துணை அமைப்பாளர்.

175வது வட்டம், நேதாஜி சாலை, நிகழ்ச்சி : 500 நபர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குதல், தலைமை : க.பாரதிதாசன், வட்டச் செயலாளர்.

144-வது வட்டம், மதுரவாயல் மார்க்கெட் அருகில், நிகழ்ச்சி : 500 பேருக்கு காலை சிற்றுண்டி வழங்குதல்,

144-வது வட்டம், பிள்ளையார் கோயில் அருகில், நிகழ்ச்சி : மாணவர்களுக்கு நோட்டு, பேனா, பென்சில் வழங்குதல் தலைமை: எம்.இ.ஸ்டாலின்.

144-வது வட்டம், எம்.எம்.டி.ஏ.பள்ளி, நிகழ்ச்சி : 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்குதல். தலைமை: எம்.இ.ஸ்டாலின்,

144-வது வட்டம், எம்.எம்.டி.ஏ.வாட்டர் டேங்க் அருகில், நிகழ்ச்சி : மாணவர்களுக்கு நோட்டு, பென்சில் மற்றும் அறுசுவை உணவு வழங்குதல். தலைமை: எம்.இ.ஸ்டாலின்.

144-வது வட்டம், கந்தசாமி நகர், நிகழ்ச்சி : 500 பேருக்கு மதிய உணவு வழங்குதல். தலைமை: எம்.இ.ஸ்டாலின்.

143-வது வட்டம், பெரிய நொளம்பூர், நிகழ்ச்சி : 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். தலைமை: நொளம்பூர். வே ராஜன், சி. சசிகுமார்.

143-வது வட்டம், சின்ன நொளம்பூர், நிகழ்ச்சி : 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். தலைமை: நொளம்பூர். வே ராஜன், சி. சசிகுமார்.

143-வது வட்டம், மாதா கோயில் நகர், நிகழ்ச்சி : 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். தலைமை: நொளம்பூர். வே ராஜன், சி. சசிகுமார்.

143-வது வட்டம், டி.என். எச்.பி., 4வது பிளாக், நிகழ்ச்சி : 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல், தலைமை: நொளம்பூர் வே ராஜன், சி.சசிகுமார்.

143-வது வட்டம், டி.என். எச்.பி. 5வது பிளாக், நிகழ்ச்சி : 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். தலைமை: நொளம்பூர். வே ராஜன், சி. சசிகுமார்.

143-வது வட்டம், கெஜலட்சுமி நகர், நிகழ்ச்சி : 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். தலைமை: நொளம்பூர். வே ராஜன், சி. சசிகுமார்

143-வது வட்டம், எஸ்.பி. கார்டன், நிகழ்ச்சி : 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல். தலைமை: நொளம்பூர். வே ராஜன், சி. சசிகுமார்

143-வது வட்டம், ஐஸ்வர்யம் அடுக்கு மாடி குடியிருப்பு, நிகழ்ச்சி: 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல், தலைமை: நொளம்பூர். வே ராஜன், சி.சசிகுமார்.

**நாள்: 2–3–2024 & 3–3–2023**

153-வது வட்டம், போரூர் பாலமுருகன் நகர் தளபதி திடல்,நிகழ்ச்சி : கபடி போட்டி, தலைமை: டி.நரேஷ்குமார் இளைஞர் அணி.

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் முன்னணித் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.





நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புகின்ற கழகத் தோழர்கள் விண்ணப்பத்தை முறையாக பூர்த்தி செய்து, 1.3.2024 முதல் 7.3.2024 மாலை 6 மணிக்குள் தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்திட வேண்டுமென தலைமைக் கழகம் அறிவித்ததிற்கிணங்க, நேற்று (01.03.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், கழகத்தின் சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்பியவர்கள், முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப மனுக்களை செலுத்தினர். இந்நிகழ்வின்போது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ்.ஆஸ்டின், ப.தாயகம் கவி, தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் உடனிருந்தனர்.